Tamil Synthesis

# SYNTHESIS

**3rd Biannual Report (January-June 2026)**

## Monitoring the Implementation of the Government's Manifesto

***'A Thriving Nation-A Beautiful Life'***

PAFFREL

මාර්තු
மார்ச்
MARCH 12
March 12 Movement

## தொகுப்பு

## மூன்றாவது அரையாண்டு அறிக்கை (ஜனவரி – ஜூன் 2026)

## அரசாங்கத்தின் தேர்தல் அறிக்கை – "வளமான நாடு - அழகான வாழ்க்கை" அமுலாக்கத்தைக் கண்காணித்தல்

## பவ்ரல் மற்றும் மார்ச் 12 இயக்கம்

### அறிமுகம்

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் அடைவுகள் சார்ந்த ஆட்சியை ஊக்குவிப்பதற்காக, பவ்ரல் அமைப்பு, மார்ச் 12 இயக்கத்துடன் இணைந்து, அரசாங்கத்தின் தேர்தல் அறிக்கையான "வளமான நாடு – அழகான வாழ்க்கை" அமுலாக்கத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகிறது. 2024 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து, இந்த முயற்சியானது அரசாங்கத்தின் இரண்டாவது பதவிக் காலத்தின் முதல் ஆறு மாதங்களில் (ஜனவரி-ஜூன் 2026) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், தேர்தல் வாக்குறுதிகளுடன் எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதை மதிப்பீடு செய்துள்ளது. இந்த கண்காணிப்பானது தேர்தல் வாக்குறுதிகளின் நோக்கம், கொள்கை வழிகாட்டல்கள், அமைச்சரவை முடிவுகள், 2026 தேசிய வரவுசெலவுத் திட்டம், பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் முக்கியமாக "டித்வா" சூறாவளிக்கு பிந்தைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கோட்பாடுகள், அளவுகோல்கள் மற்றும் அனுமானங்களின் கட்டமைப்பைப் பயன்படுத்தி கவனம் செலுத்தியுள்ளது.

### வளமான நாடு - அழகான வாழ்க்கை

அரசாங்கத்தின் முதன்மையான தொலைநோக்கு பார்வை பின்வருவனவற்றை உறுதி செய்வதாகும்: வசதியான நாட்டிற்கு (சமூகத்திற்கு) ஒரு நிறைவான வாழ்க்கை, பாதுகாப்பான நாட்டிற்கு (சமூகத்திற்கு) ஒரு கௌரவமான வாழ்க்கை, வளமான தேசமாக ஒரு நவீன வாழ்க்கை (பொருளாதாரம்), பலமான நாடாக ஒரு கண்ணியமான வாழ்க்கை (ஆளுமை). தேர்தல் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள 1,333 வாக்குறுதிகள் மூலம் தேசிய முக்கிய முடிவுப் பகுதிகளை (NKRAs) அடைவதற்கான வழிகாட்டும் பணிகளாக இந்த நான்கு முக்கிய எதிர்பார்ப்புகள் அமைகின்றன. இந்த தொலைநோக்குப் பார்வையை நடைமுறைப்படுத்த, 39 துணைத் தேசிய முக்கிய முடிவுப் பகுதிகள் (இலக்குகள்) அடையாளம் காணப்பட்டுள்ளன. அரசாங்கம் தனது **தேர்தல் அறிக்கையை தேசியக் கொள்கைக் கட்டமைப்பாக** முறைப்படி ஏற்றுக்கொண்டு, உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புகளை நிறுவியதன் மூலம் ஒரு நேர்மறையான அடியை எடுத்துவைத்துள்ளது.

### வழிமுறை

மூன்றாவது கட்டமானது நிறைவேற்று மற்றும் அமைச்சரவை முடிவுகள், பாராளுமன்ற நடவடிக்கைகள், வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் அமைச்சுக்களின் செயல்பாடுகள் உள்ளிட்ட அளவுகோல் மற்றும் தரமான குறிகாட்டிகள் தொடர்பில் தேர்தல் வாக்குறுதிகளுக்கு சம்மந்தமான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்கிறது. இந்த மதிப்பீடு, OECD-DAC இன் பொருத்தப்பாடு (Relevance), வினைத்திறன் (Efficiency), மற்றும் பயனுறுதி (Effectiveness) ஆகிய அளவுகோல்களைப் பயன்படுத்தி சீரமைப்பு, செயல்படுத்தல் முன்னேற்றம், வள பயன்பாடு மற்றும் உத்தேசிக்கப்பட்ட முடிவுகளின் சாதனை ஆகியவற்றை ஆராய்கிறது. தாக்கம் (Impact) மற்றும் நிலைபேறானதன்மை (Sustainability) ஆகியவை இந்த கட்டத்தில் மதிப்பீடு செய்யப்படவில்லை, ஏனெனில் அவற்றுக்கு நீண்ட கால செயற்பாட்டுக் காலத்தில் சான்றுகள் தேவைப்படுகின்றன.

**தேர்தல் வாக்குறுதிகளின் நோக்கம்**

தேர்தல் அறிக்கை கண்காணிப்புக் கட்டத்தின் மூன்றாவது கட்டமானது வாக்குறுதிகளின் திசையமைப்பை ஆய்வு செய்து, 1,333 வாக்குறுதிகளை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது: 407 கொள்கை சார்ந்த வாக்குறுதிகள் (31%), 523 அபிவிருத்தி சார்ந்த உறுதிமொழிகள் (39%), 403 கொள்கை மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டு பரிமாணங்களையும் கொண்ட உறுதிமொழிகள் (30%)




(படம் 1: தேர்தல் வாக்குறுதிகளின் நோக்கம்)

[1] https://www.treasury.gov.lk/api/file/beb1840e-cfd0-447f-9d0e-35937c48f1f7

[2] இந்த அளவுகோல்கள், ஒரு தலையீட்டின் (கொள்கை, உபாயம், திட்டம், செயற்திட்டம் அல்லது செயல்பாடு) நன்மை அல்லது மதிப்பைத் தீர்மானிக்கப் பயன்படும் ஒரு நெறிமுறை சார்ந்த கட்டமைப்பை வழங்குகின்றன. இவை மதிப்பீட்டுத் தீர்ப்புகளை வழங்குவதற்கான அடிப்படையாகச் செயல்படுகின்றன.

அரசாங்கத்தின் தேர்தல் அறிக்கையானது ஆட்சி, பொது நிர்வாகம், சமூக அபிவிருத்தி, பொருளாதார மாற்றம், சுற்றுச்சூழல் நிலைபேறானதன்மை மற்றும் தேசிய அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த மற்றும் பல்துறை சார்ந்த கொள்கைக் கட்டமைப்பை முன்வைக்கிறது. தொகுப்பு அறிக்கையைப் பொறுத்தவரை, முக்கிய உறுதிமொழிகளை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

| பிரிவு | கொள்கையின் முக்கிய விடயங்கள் |
|---|---|
| கல்வி | "கலாச்சாரத்தை ஒரு பரந்த மற்றும் ஆற்றல்மிக்க தனமாக" அங்கீகரிக்கும் ஒரு கல்விக் கொள்கையை உருவாக்குதல். |
| சுகாதாரம் | "சுகாதாரத் துறையில் பொது முதலீட்டை அதிகரிப்பதில்" கவனம் செலுத்துதல் மற்றும் அதனை திறமையான மற்றும் அணுகக்கூடிய பொதுச் சேவையாக வலுப்படுத்துதல். |
| விளையாட்டு | தேசிய பெருமையை மீட்டெடுப்பதையும் ஆரோக்கியமான, ஒழுக்கமான மக்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்ட "விளையாட்டு மற்றும் உடல் நலக் கொள்கையை" செயல்படுத்துதல். |
| சுற்றாடல் | "பல்லுயிர்களின் ஆரோக்கியமான இருப்பை உறுதி செய்யும் நிலையான சூழல்" என்ற தொலைநோக்குப் பார்வையை அடிப்படையாகக் கொண்டது. |
| ஊடகம் | பொருத்தமான ஊடகக் கொள்கைக் கட்டமைப்பை நிறுவுதல். |
| ஓய்வூதியம் | நாட்டில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் பொருந்தக்கூடிய விரிவான ஓய்வூதியக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல். |
| தொழிலாளர் | ஒரு விரிவான தொழிலாளர் கொள்கையை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல். |
| பெண்கள் | பெண்கள் எதிர்கொள்ளும் அழுத்தங்கள் மற்றும் சுமைகளைக் குறைக்கும் பொதுச் சேவைகள் மற்றும் கொள்கைத் தலையீடுகளுக்கு முன்னுரிமை அளித்தல். |
| சிறுவர்கள் | "குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலன்" பற்றிய கொள்கை இலங்கையில் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு விரிவான அணுகுமுறையை பின்பற்றுதல். |
| மாற்றுத்திறனாளிகள் | சமுதாயத்தில் சமமான அடிப்படையில் பங்கேற்பதற்கு "மாற்றுத்திறனாளிகளின்" உரிமைகளை அங்கீகரித்து மேம்படுத்தல். |
| பொருளாதார கொள்கை | "உற்பத்தி சார்ந்த பொருளாதாரத்தை" மேம்படுத்துவதை அடையாளம் காணுதல். பொருளாதார ஜனநாயகத்தை உருவாக்குதல். |
| வரிக் கொள்கை | வரிக் கொள்கையை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் ஒரு பிரத்யேக நிறுவனப் பிரிவை நிறுவுதல். |
| நிதிக் கொள்கை | அந்நிய செலாவணி சந்தை உட்பட நிதிச் சந்தைகளில் ஸ்திரத்தன்மையை ஊக்குவிக்க "கொள்கை வட்டி விகிதங்களை" சீராக்குதல். |

| | |
|---|---|
| வியாபாரம் | இறக்குமதி கொள்கையில் திருத்தம் செய்தல். |
| விவசாயம் | நிலவும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்குதல், விவசாய உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை அதிகரித்தல். |
| மீன்பிடி | அறிவியல் மற்றும் நடைமுறை அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, மீன்பிடித் துறையை “நிலையான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாகப் பொறுப்பான முறையில்” உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல். |
| சுற்றுலா | சுற்றுலாத் துறைக்கான கொள்கைகளின் வளர்ச்சி மற்றும் உருவாக்கத்திற்கு ஆதரவாக “சுற்றுலாக் கொள்க உருவாக்கக் குழுவை (வீகுஊ)” நிறுவுதல். |
| கைத்தொழில் கொள்கை | “தேசிய கைத்தொழில்துறை கொள்கை கட்டமைப்பை” செயல்படுத்துதல். |
| டிஜிட்டல் மற்றும் செயற்கைத் தொழில்நுட்பம் | தேசிய செயற்கை நுண்ணறிவு (AI) கொள்கையை உருவாக்கி செயல்படுத்துதல். |
| சக்திவளம் | எதிர்கால சந்ததியினருக்காக வளங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் உலகளாவிய பொருளாதாரத்தில் பங்கேற்றல். |
| கப்பல்துறை | கடல்சார் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டை உறுதிசெய்வதற்கு “ஒருங்கிணைந்த கடல்சார் கொள்கை மற்றும் ஆளுகைக் கட்டமைப்பை” முன்மொழிதல். |
| தொலைத்தொடர்பு | கம்பியில்லா மற்றும் கம்பியற்ற தொலைத்தொடர்பு உட்பட பரந்த “தொடர்புத் துறையை” உள்ளடக்கிய கொள்கைக் கட்டமைப்பு. |
| காணி | காணிப் பயன்பாட்டுக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு இணங்க “நில வளங்களின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பை முன்மொழிதல். |
| வெளியுறவுக் கொள்கை | இலங்கையின் “அணிசேராக் கொள்கை” என்ற பாரம்பரியத்தில் வேரூன்றியுள்ளது, தேசிய நலன்கள் வெளியுறவுக் கொள்கையின் அடித்தளமாக அடையாளம் காணப்பட்டுள்ளன. |
| பாதுகாப்புக் கொள்கை | “தேசிய தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு அமைப்புகளை” வலுப்படுத்துதல். |
| தேசிய மொழிக் கொள்கை | “அரசியலமைப்பின் 16 வது திருத்தத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிக் கொள்கையின் முழுமையான அமலாக்கம்.” |
| ஆளுகை | நீண்டகால சமூக மற்றும் கட்டமைப்புப் பிரிவினைகளை கடந்து, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பெருந்தோட்டச் சமூகங்கள் உட்பட “அனைத்து இன மற்றும் சமூகக் குழுக்களையும் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த இலங்கை அடையாளத்தை” உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அடையாளம் காட்டுதல். |

அட்டவணை – 1 கொள்கையின் முக்கிய விடயங்கள்

## அமைச்சரவை முடிவுகளின் மதிப்பீடுகள்

ஜனவரி–ஜூன் 2026 காலப்பகுதியில், கண்காணிப்புக் குழு 381 அமைச்சரவை முடிவுகளை ஆராய்ந்தது. 24 சட்டப்பூர்வ முடிவுகளைத் தவிர்த்த பிறகு, 357 முடிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன. 92 முடிவுகள் (26%) வாக்குறுதிகளுக்கு மிகவும் பொருத்தமானவை என மதிப்பிடப்பட்டன, 81 முடிவுகள் (23%) பொருத்தமானவை, 77 முடிவுகள் (22%) பகுதியளவில் பொருத்தமானவை, 107 முடிவுகள் (30%) தேர்தல் அறிக்கையுடன் தொடர்பில்லாதவை என அடையாளம் காணப்பட்டன.




*(படம் 2: தேர்தல் வாக்குறுதிகளுடன் அமைந்த பொருத்தத்தின் சதவீதங்கள்)*

பொருளாதார முகாமைத்துவம், உட்கட்டமைப்பு, விவசாயம் மற்றும் காணி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் அமைச்சரவை முடிவுகள் குறிப்பாக செறிவூட்டப்பட்டிருந்தன. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 56 முடிவுகளை (15.7%) கணக்கில் கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு 51 முடிவுகளுடன் (14.3%) காணப்படுகின்றது.

### பாராளுமன்ற செயற்பாடுகள்

மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பு, பசுமை ஹைட்ரஜன், டிஜிட்டல் மயமாக்கல், பெண்கள் மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு, மற்றும் காணி டிஜிட்டல் மயமாக்கல் போன்ற துறைகளில் இக்காலகட்டத்தில் கொள்கை மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகளை அறிக்கை அடையாளம் காட்டுகிறது. இருப்பினும், கொள்கைகள், சட்டங்கள் அல்லது நிறுவன பொறிமுறைகளை ஏற்றுக்கொள்வது, ஒரு தேர்தல் உறுதிமொழியை நிறைவேற்றுவதாகக் கருதப்படக் கூடாது என்பதை அறிக்கை வலியுறுத்துகிறது.

ஜனவரி-ஜூன் 2026 இல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட 15 சட்டங்களை அறிக்கை ஆய்வு செய்து, வாக்குறுதிகள் மற்றும் பரந்த கொள்கை நோக்கங்களுடன் அவற்றின் சீரமைப்பை மதிப்பீடு செய்தது. 07 சட்டங்கள் குறிப்பிட்ட வாக்குறுதிகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளன, 04 சட்டங்கள் பகுதி சீரமைக்கப்பட்டுள்ளன அல்லது மறைமுகமாக தொடர்புடையவை, 04 சட்டங்கள் அடையாளம் காணப்பட்ட வாக்குறுதிகளுடன் நேரடி தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. பின்வரும் மூன்று பாராளுமன்ற விசேட குழுக்களை நிறுவுவதையும் கண்காணிப்பு கருத்தில் கொண்டது:

- மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள்
- பாராளுமன்ற தேர்தல் முறையின் சீர்திருத்தம் மற்றும்
- இலங்கைக்குள்ளும் வெளிநாட்டிலும் வசிக்கும் இலங்கை குடிமக்களின் வாக்குரிமையைப் பாதுகாத்தல்.

இந்த அறிக்கை, இவற்றை ஜனநாயகப் பங்கேற்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான நடைமுறை-நிலை முன்னேற்றங்களாக அங்கீகரிக்கிறது் அதேவேளையில், இவற்றின் உண்மையான பங்களிப்பு உருவாக்கப்படும் பரிந்துரைகள் மற்றும் அதைத் தொடர்ந்து எடுக்கப்படும் சட்டப்பூர்வ மற்றும் கொள்கை நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

## 2026 தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் செயலாக்க மதிப்பீடு

கிடைக்கப்பெற்ற அமைச்சுக்களின் வருடாந்த செயல்திட்டங்கள் மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் மூலம் 2026 தேசிய வரவுசெலவுத் திட்டத்தை கண்காணிப்புக் குழு ஆய்வு செய்தது. 2026 தேசிய வரவுசெலவுத் திட்டம் சுமார் ரூ. 8,980 பில்லியன் மொத்த செலவினங்களை வழங்குகிறது (64% மீண்டெழும் செலவு மற்றும் 36% மூலதனச் செலவு). இரண்டாவது காலாண்டின் இறுதியில், மொத்த செலவினம் ரூ. 4,111.16 பில்லியனை எட்டியது (வருடாந்த ஒதுக்கீட்டில் சுமார் 46%).

(படம் 3: மொத்த செலவினம் எதிர் வரவுசெலவுத் திட்டம் 2026 (படம் 4: 2 ஆவது காலாண்டின் இறுதியில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவு முன்னேற்றம்)

அமைச்சக முன்னேற்றத் தகவல்களைப் பெறுவதில் உள்ள இடைவெளிகளால், தனிப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளுக்கு தொடர்பான முன்னேற்றங்களை நிறுவுவதில் கண்காணிப்புக் குழு கட்டுப்பாடுகளை எதிர்கொண்டது. 25 அமைச்சகங்களிடமிருந்து தேவையான ஆவணங்களைப் பெற்ற நிலை பின்வருமாறு:

| தேவைப்பட்ட ஆவணம் | முழுமையானது | பகுதியளவானது |
|---|---|---|
| மூலோபாய திட்டம் (2025-2029) | 1 அமைச்சு | ஆவணங்கள் இல்லை |
| வருடாந்த நடவடிக்கை திட்டம் 2026 | 15 அமைச்சுகள் | 2 அமைச்சுகள் |
| முதல் காலாண்டு முன்னேற்ற அறிக்கை (ஜனவரி-மார்ச் 2026) | 11 அமைச்சுகள் | 4 அமைச்சுகள் |
| இரண்டாவது காலாண்டு முன்னேற்ற அறிக்கை (ஏப்ரல்-ஜுன் 2026) | 6 அமைச்சுகள் | 4 அமைச்சுகள் |

முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் உள்ள இடைவெளிகள் காரணமாக, இந்த மதிப்பீடானது முக்கியமாகப் பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையிலும், அவற்றுடன் கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வ ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையிலும் செய்யப்பட்டது. எனவே, அரைகுறையான அறிக்கை சமர்ப்பிப்புகள் மற்றும் தகவல் இடைவெளிகளால் ஏற்படும் மட்டப்பாடுகளை ஏற்றுக்கொண்டு, கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் அடிப்படையிலேயே இந்தத் கண்டறிதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### அவதானிப்புகள்

ஜனவரி-ஜுன் 2026 இல் வாக்குறுதிகளின் அமுலாக்கத்தைக் கண்காணிப்பது ஒரு கலவையான முன்னேற்றத்தைக் காட்டுகிறது. பல அரசாங்க முயற்சிகள் இலக்குகளை நோக்கி நகர்வதைக் காட்டுகின்றன, அதே நேரத்தில் பல முக்கிய உறுதிமொழிகள் கொள்கை, சட்டமன்ற அல்லது







தயாரிப்பு நிலையில் உள்ளன. ஒட்டுமொத்தமாக, அரசாங்கத்தின் நடவடிக்கை கொள்கைகள், சட்டங்கள், நிறுவன அமைப்புகள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை உருவாக்குவதில் அதிக கவனம்

செலுத்தப்பட்டுள்ளது. எனினும், அரசாங்க நடவடிக்கையைத் தொடங்குவதற்கும் குடிமக்களுக்கு அளவிடக்கூடிய முடிவுகளைக் காட்டுவதற்கும் இடையே கணிசமான இடைவெளி உள்ளது.

- வீட்டுவசதி கொள்கை சீர்திருத்தம், வறுமை ஒழிப்பு, கல்வி, பெண்கள் வலுவூட்டல், சிறுவர் பாதுகாப்பு, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் ஆளுகை மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் மீளாய்வு உள்ளிட்ட பல பகுதிகளில் முன்னேற்றம் தெளிவாகத் தெரிகிறது. தேசிய வீட்டுவசதிக் கொள்கையின் திருத்தம், குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் மற்றும் தோட்டப்புற சமூகங்களின் வீட்டுவசதித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு சாத்தியமான கட்டமைப்பை வழங்குகிறது. அதேவேளையில், ‘‘பிரஜாசக்தி’’திட்டம் மற்றும் அது தொடர்பான கிராமிய அபிவிருத்தி முயற்சிகள் வறுமை ஒழிப்பில் மேற்கொள்ளப்பட்ட கணிசமான பிரயத்தனங்களைப் பிரதிபலிக்கின்றன.
- அதேபோன்று, பாதிக்கப்படக்கூடிய மாணவர்களுக்கான ஆதரவு நடவடிக்கைகள், மாதவிடாய் சுகாதாரம், வாழ்நாள் முழுவதுமான கற்றல், பெண்களின் பொருளாதார ரீதியான முன்னேற்றம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆகியவை, தேர்தல் அறிக்கையின் பரந்த இலக்குகளை திட்டங்களாகவும் நிறுவன ரீதியிலான தலையீடுகளாகவும் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை வெளிப்படுத்துகின்றன. நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்கு பதிலாக முன்மொழியப்பட்டுள்ள புதிய மாற்றமும், கருத்துச் சுதந்திரம் தொடர்பான வாக்குறுதியை நோக்கிய ஒரு நகர்வைக் காட்டுகிறது.
- அதேவேளையில், பல வாக்குறுதிகள் பகுதியளவில் அல்லது வரையறுக்கப்பட்ட அளவிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நுண்கடன் மற்றும் கடன் ஒழுங்குமுறை அதிகாரசபைச் சட்டம், ஒரு ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவுகிறது. இருப்பினும், அதிக வட்டியினால் பாதிக்கப்பட்ட பெண்கள் உட்பட, கடனாளிகளைப் பாதுகாப்பதாகக் கூறப்பட்ட தேர்தல் அறிக்கையின் குறிப்பிட்ட இலக்கை அது எந்த அளவுக்கு நிவர்த்தி செய்கிறது என்பது குறித்து கவலைகள் நீடிக்கின்றன. மேலும், குறிப்பிடப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு 0% பெறுமதி சேர்வரி வரி (VAT) வீதத்தை அறிமுகப்படுத்துவதற்கான தேர்தல் அறிக்கை முன்மொழிவை, பெறுமதி சேர்வரி வரி சீர்திருத்தங்கள் இன்னும் முழுமையாக அமல்படுத்தவில்லை.
- முதியோருக்கு சாதாரண வங்கி வட்டி வீதத்தை விட 5% மேலதிக வட்டி வீதம் வழங்குவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதி, 3% உயர்வு மட்டுமே ஒப்புதலளிக்கப்பட்ட நிலையில், பகுதியளவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில், சட்டப்படியான மற்றும் கொள்கை ரீதியிலான நடவடிக்கைகள், மூலத் தேர்தல் அறிக்கை வாக்குறுதிகளின் உண்மையான இலக்குகளைப் போதுமான அளவு பிரதிபலிக்கின்றனவா என்பதை மதிப்பிடுவதன் முக்கியத்துவத்தை கண்காணிப்பு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஆளுகை, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஆகியவற்றில் முக்கியமான இடைவெளிகள் இன்னும் நீடிக்கின்றன.
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாற்றல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) கிளை அலுவலகங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைத்தல் மற்றும் ஆறு மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள முறைப்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கான தெளிவான சான்றுகள் எதுவும் இல்லை. அதேபோல, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்குமான தெளிவான வழிவரைபடம் (roadmap) எதுவும் அறிக்கை தயாரிக்கப்பட்ட காலத்தில் பகிரங்கமாகக் கிடைக்கவில்லை. மாற்று கடன் நிலைபேறானதன்மை பகுப்பாய்வு (Debt Sustainability Analysis) அல்லது விரிவான வெளிநாட்டுக் கடன் கணக்காய்வு பற்றிய பகிரங்கமான ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆதரவுடனான திட்டத்தை அரசாங்கம்

தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருவதையும், தொடர்புடைய தேர்தல் அறிக்கை வாக்குறுதிகளுக்கு எதிராக தொடர்ந்து கண்காணிக்க வேண்டியுள்ளது.

- மேலும், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகமான தகவல்கள் கிடைப்பது ஆகியவை அனைத்துத் துறைகளையும் பாதிக்கும் ஒரு பொதுவான சவாலாக (cross-cutting challenge) இருப்பதாகக் கண்காணிப்பு அறிக்கை அடையாளப்படுத்துகிறது. 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், டிட்வா சூறாவளி (Cyclone Ditwah) மீட்பு நடவடிக்கைகள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் முதியோருக்கான வட்டி வீத வாக்குறுதி ஆகியவற்றின் மதிப்பீட்டில் இது தெளிவாகத் தெரிகிறது. முழுமையான மற்றும் நேரத்தோடான அமுலாக்கத் தகவல்கள் இல்லாதன, அரசாங்கத்தின் தலையீடுகள் அவற்றின் நோக்கம் சார்ந்த பலன்களையும் விளைவுகளையும் அடைகின்றனவா என்பதை சுயாதீன அமைப்புகளும் குடிமக்களும் தீர்மானிப்பதைக் கடினமாக்குகிறது. டிட்வா சூறாவளி மீட்பு நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், பல நடவடிக்கைகள் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடக்கப்பட்ட போதிலும், ஒரு விரிவான அமுலாக்க மீளாய்வு இல்லாதது, அவற்றின் செயல்திறன், பரப்பளவு மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீதான தாக்கத்தை மதிப்பிடுவதைக் கட்டுப்படுத்துகிறது.
- மற்றுமொரு பொதுவான பிரச்சினை என்னவெனில், கொள்கை மற்றும் சட்டப் நடைமுறைகளில் அர்த்தமுள்ள கலந்தாய்வு மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்பு அவசியமாகும். நுண்கடன் ஒழுங்குமுறை, பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக முன்மொழியப்பட்டுள்ள மாற்றம், அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் மாகாண வைத்தியசாலைகளை மத்திய மயமாக்கல் தொடர்பில் கண்டறியப்பட்ட கவலைகள், நிபுணத்துவ அறிவு, பங்குதாரர்களின் பார்வைகள் மற்றும் சமூக அளவிலான சான்றுகளை உள்ளிணைப்பதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, அடிப்படை உரிமைகள், அதிகாரப் பகிர்வு மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களைப் பாதிக்கும் சீர்திருத்தங்களுக்கு வெளிப்படையான நடைமுறைகளும் தெளிவான நியாயப்படுத்தல்களும் தேவைப்படுகின்றன.

**வறுமை ஒழிப்பு குறித்த முக்கிய அவதானிப்பு**

கண்காணிப்பில் இருந்து வெளிப்படும் ஒரு குறிப்பிடத்தக்க அவதானிப்பு என்னவென்றால், “அஸ்வெசும“ மற்றும் பிற சமூக உதவிகளைப் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கை 2025 இல் சுமார் 2.4 மில்லியனிலிருந்து 1.2 மில்லியனாகக் குறைந்துள்ளது. சுமார் 50 சதவீதக் குறைவு. அதே நேரத்தில், இதற்கான தேசிய வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 16,000 மில்லியனில் இருந்து ரூ. 15,000 மில்லியனாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் எண்ணிக்கையில் இத்தகைய கணிசமான குறைவு குடும்பப் பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் மற்றும் சமூக உதவியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதைக் குறிக்கலாம் என்றாலும், அதுவே வறுமையை வெற்றிகரமாகக் குறைத்ததற்கான சான்றாகக் கருதப்பட முடியாது. உதவி பெறாத சுமார் 1.2 மில்லியன் குடும்பங்கள் உண்மையிலேயே வறுமையிலிருந்து வெளியேறியுள்ளனவா என்பதைத் தீர்மானிக்க மேலும் விரிவான மதிப்பீடு தேவைப்படுகிறது.

இலங்கையின் நலன்புரி சார் ஆளுகையின் நீண்டகால வரலாற்றின் பின்னணியில் இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அடுத்தடுத்த அரசாங்கங்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களையே பெரிதும் நம்பியிருந்தன. 1990களில் இருந்து, “ஜனசவிய'' போன்ற திட்டங்கள் தெளிவான வறுமைக் குறைப்பு இலக்குகளுடனும், வரையறுக்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் காலப்பகுதிகளுடனும் அறிமுகப்படுத்தப்பட்டன. காலப்போக்கில், அடுத்தடுத்த அரசாங்கங்கள் இந்த முயற்சிகளை உருமாற்றி, நீண்டகால சமூகப் பாதுகாப்புத் திட்டங்களாக விரிவுபடுத்தின. இது “சமுர்த்தி'', “திவிநெகும“ மற்றும் அதனைத் தொடர்ந்து “அஸ்வெசும'' போன்ற நிறுவனங்கள் மற்றும் திட்டங்களின் நிறுவலுக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது. தற்போதைய

அரசாங்கத்தின் கீழ் அஸ்வெசும திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதுடன், ஆட்சியின் முதல் ஆண்டில் மாதாந்தக் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டன. இதில் ஒரு வகை பயனாளிகளுக்கான கொடுப்பனவு ரூ. 8,500 இலிருந்து ரூ. 10,000 ஆகவும், ஒவ்வொரு வகையினருக்கு ரூ. 15,000 இலிருந்து ரூ. 17,500 ஆகவும் உயர்த்தப்பட்டது.

அரசாங்கத்தின் இரண்டாவது ஆண்டில், பயனாளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது தொடர்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரால் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த, பயனாளிகளின் எண்ணிக்கை சுமார் 2.4 மில்லியனிலிருந்து 1.2 மில்லியனாகக் குறைந்துள்ளதாகத் தெரிவித்தார். வறுமை மற்றும் சமூகப் பாதுகாப்பு கோணத்தில் இருந்து பார்க்கும்போது, இந்த வளர்ச்சி நிலைமை மிக நெருக்கமான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இங்குள்ள முக்கியமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு (M&E) கேள்வி என்னவென்றால், எத்தனை பயனாளிகள் இத்திட்டத்திலிருந்து வெளியேறியுள்ளனர் என்பது மட்டுமல்ல, அவ்வாறு வெளியேறியவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தில் நிலையான முன்னேற்றத்தை அடைந்துள்ளனரா மற்றும் அவர்கள் இனி வறுமையால் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இல்லையா என்பதுவே ஆகும்.

எனவே, பயனாளிகளின் எண்ணிக்கை குறைப்பானது ஒரு முறைசார்ந்த பலன் மற்றும் தாக்க மதிப்பீட்டுடன் (outcome and impact assessment) இணைக்கப்பட வேண்டும். அத்தகைய மதிப்பீடு, முன்னாள் பயனாளிகளின் சமூக-பொருளாதார நிலை, குடும்ப வருமானம் மற்றும் செலவினம், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார நிலைமைகள், உணவுப் பாதுகாப்பு, கடன் சுமை, அத்தியாவசிய சேவைகள் கிடைக்கப்பெறும் தன்மை மற்றும் எதிர்கால பொருளாதார பாதிப்புகளுக்கு அவர்கள் ஆளாகும் வாய்ப்பு ஆகியவற்றை ஆராய வேண்டும். மேலும், சமூக உதவி இன்னும் தேவைப்படும் குடும்பங்களை இலக்கு நிர்ணய மற்றும் தேர்வு வழிமுறைகள் துல்லியமாக அடையாளம் காண்கின்றனவா என்பதையும் அது மதிப்பிட வேண்டும். இத்தகைய ஆதாரங்கள் இல்லாவிட்டால், பயனாளிகளின் எண்ணிக்கை குறைப்பானது குடும்ப நலனில் ஏற்பட்ட உண்மையான முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறதா அல்லது தகுதிநிலைகள், இலக்கு நிர்ணயம் மற்றும் நிர்வாக நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிக்கிறதா என்பதைக் கண்டறிவது கடினமாகும்.

இந்த அவதானிப்பானது, ஜனவரி - ஜூன் 2026 தேர்தல் அறிக்கை கண்காணிப்புப் செயற்பாட்டின் பரந்த கண்டறிதல்களுடன் ஒத்துப்போகிறது. பல துறைகளில் அரசாங்கத்தின் செயல்பாடானது கொள்கைகள், சட்டங்கள், திட்டங்கள், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் நிறுவன வழிமுறைகள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. இருப்பினும், அவற்றின் வெளிப்பாடுகள் (outputs), விளைவுகள் (outcomes) மற்றும் நீண்டகால தாக்கங்களை (longer-term impact) நிரூபிக்கும் நம்பகமான ஆதாரங்கள் இன்னும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளன. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை வெறும் செலவினங்கள் மற்றும் திட்டப் பரப்பளவு ஆகியவற்றின் மூலம் அளவிடுவதைத் தாண்டி, இந்தத் தலையீடுகள் மக்களின் வாழ்க்கையில் நிலையான முன்னேற்றங்களை ஏற்படுத்துகின்றனவா என்பதை மதிப்பிடுவதை நோக்கி நகர வேண்டியதன் அவசியத்தை அஸ்வெசும திட்டத்தின் அனுபவம் குறிப்பாக விளக்குகிறது.

வறுமை ஒழிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பை அரசாங்கம் வலுப்படுத்த வேண்டும் என்று கண்காணிப்பு அறிக்கை பரிந்துரைக்கிறது. குாலாந்தர மதிப்பீடுகள் பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிதி ஒதுக்கீடுகளைத் தவிர, குடும்பங்களின் வறுமை நிலை, வாழ்வாதாரம், வருமான பாதுகாப்பு மற்றும் பாதிப்புத் தன்மை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் கண்காணிக்க வேண்டும். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் இருந்து வெளியேறும் குடும்பங்கள் வறுமையிலிருந்து நிலையான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளனரா அல்லது தொடர்ச்சியான பாதிப்பில் உள்ளனரா என்பதைத் தீர்மானிக்க அவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய சான்றுகளை வெளிப்படையாக வெளியிடுவது பொறுப்புக்கூறலை வலுப்படுத்தும், தேர்தல் வாக்குறுதிச் செயல்பாட்டை சுயாதீனமாக மதிப்பிட உதவும் மற்றும் வறுமைக் ஒழிப்பில்

எட்டப்பட்ட உண்மையான முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்கு மிகவும் நம்பகமான அடிப்படையை வழங்கும்.

சுருக்கமாகக கூறினால், ஜனவரி - ஜூன் 2026 கண்காணிப்பானது, தேர்தல் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதில் சீரற்ற முன்னேற்றம் நிலவுவதைக் காட்டுகிறது. கொள்கை உருவாக்கம், சட்டங்கள், திட்டங்கள் மற்றும் நிறுவன ஏற்பாடுகளில் கணிசமான கவனம் செலுத்தப்பட்டுள்ளபோதிலும், பல துறைகளில் தெளிவான முடிவுகளுக்கான சான்றுகள் போதுமானதாக இல்லை. எனவே, அடுத்த கட்ட கண்காணிப்பானது, அளவிடக்கூடிய இலக்குகள், செயல்பாட்டு வெளியீடுகள் (outputs), வரவு செலவுத் திட்ட பயன்பாடு, பயனாளிகளின் எல்லை, முடிவுகள் மற்றும் தாக்கம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் இதற்கு நம்பகமான மற்றும் சரிபார்க்கக்கூடிய தகவல்களை உடனுக்குடன் வெளியிடுவது அவசியமாகும். அரசாங்க அறிக்கையிடல், வெளிப்படைத்தன்மை, கலந்துரையாடல் மற்றும் சுயாதீனக் கண்காணிப்பு ஆகியவற்றை வலுப்படுத்துவது, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தேர்தல் வாக்குறுதிகளை மக்களின் வாழ்க்கையில் தெளிவான முன்னேற்றங்களாக மாற்றுகின்றனவா என்பதை குடிமக்களும் பிற பங்குதாரர்களும் சிறப்பாக மதிப்பிட உதவும்.

**அனர்த்த முகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்**

அனர்த்த முகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்: தேர்தல் அறிக்கையில் உள்ள 13 அனர்த்தங்கள் தொடர்பான வாக்குறுதிகளையும், தேசிய கொள்கை கட்டமைப்பில் உள்ள 10 அனர்தங்களை மையமாகக் கொண்ட வாக்குறுதிகளையும் அறிக்கை அடையாளம் கண்டுள்ளது. இவற்றில் ஐந்து வாக்குறுதிகள் நேரடியாக தேர்தல் அறிக்கையிலிருந்தே எடுக்கப்பட்டவை. ஜனவரி–ஜூன் 2026 காலப்பகுதியில், அமைச்சரவை முடிவுகள் பின்வருவனவற்றைக் கையாண்டன: விவசாயம் மற்றும் தோட்டப் பயிர் மீட்பு, அனர்த்த முன்னாயத்த மற்றும் விஞ்ஞானபூர்வமான மீள்தன்மை, அவசரகாலத் தொடர்பு மற்றும் முன்னெச்சரிக்கை திறன், மண்சரிவு ஆபத்து குறைப்பு மற்றும் பாதுகாப்பான வீட்டுவசதி, வாழ்வாதார மீட்பு மற்றும் தற்காலிக வீட்டுவசதி, காலநிலை மீள்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மனிதாபிமான உதவி மற்றும் புனரமைப்பு. ‘‘சிறப்பாக மீண்டும் கட்டியெழுப்புதல்” (Build Back Better) அணுகுமுறையின் கீழ், ரூ. 515.46 பில்லியன் மதிப்பீட்டில் 1,028 “தித்வா“ சூறாவளி மீட்புத் திட்டங்களுக்கும், ரூ. 102.22 பில்லியன் மதிப்பீட்டில் 38 மாகாண சபை திட்டங்களுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. “தித்வா’’ வுக்குப் பிந்தைய புனர்வாழ்வுக்காக அரசாங்கம் ரூ. 500 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டைச் செய்தது (ரூ. 250 பில்லியன் - உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு, ரூ. 150 பில்லியன் - வாழ்வாதாரம் மற்றும் வர்த்தகங்கள், மற்றும் ரூ. 100 பில்லியன் - வீட்டுவசதி மற்றும் நேரடி நிவாரணம்). 2026 ஜூன் 30 நிலவரப்படி, ரூ. 243.9 பில்லியன் (48.8%) பயன்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த மூன்று பிரிவுகளிலும் பொதுச் செலவினத்தின் விரிவான விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை.

**சிபார்சுகள்**

1. அரசாங்க கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறைகளை வலுப்படுத்துதல்.
2. பெறுபேறுகள் சார்ந்த கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பை நிறுவுதல்.
3. தேசிய ஊழல் ஒழிப்பு செயல் திட்டத்தின் (NACA) செயல்பாட்டை ஆண்டறிக்கை மூலம் பகிரங்கமாக மீளாய்வு செய்தல்.
4. ஆதாரங்கள் அடிப்படையிலான மற்றும் உள்ளடக்கக் கொள்கை உருவாக்கத்தை நிறுவனமயமாக்குதல்.
5. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை திறம்படவும் உரிய நேரத்திற்கும் செயல்படுத்துவதை உறுதி செய்தல்.
6. அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் முக்கிய ஜனநாயக ஆட்சிப் பொறுப்புகளுக்கு முன்னுரிமை அளித்தல்.

அரசாங்கத்தின் பதவிக்காலம் முழுவதும் தேர்தல் வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படுவதை பெவ்ரல் மற்றும் மார்ச் 12 அமைப்பு ஆகியன தொடர்ந்து சுயாதீனமாக கண்காணிக்கும். எதிர்காலத்தில், வாக்குறுதிகளுக்குப் போதுமான வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவா, அவை திறம்படச் செயல்படுகின்றனவா, இறுதியில் குடிமக்களுக்கு தெளிவான மற்றும் அளவிடக்கூடிய நன்மைகளாக மாறுகின்றனவா என்பதில் அதிக கவனம் செலுத்தும்.

தேர்தல் வாக்குறுதி கண்காணிப்பின் அரையாண்டு அறிக்கைகளைப் படிக்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:

| **முதலாவது அரையாண்டு அறிக்கை** | **இரண்டாவது அரையாண்டு அறிக்கை** | **மூன்றாவது அரையாண்டு அறிக்கை** |
|---|---|---|
| | | |

**மேலதிக தகவல்களுக்கு:**

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம் (PAFFREL) மற்றும் மார்ச் 12 இயக்கம் (M12M),
இல. 16, பர்ட் பிளேஸ், பாமன்கட வீதிக்கு அப்பால், கொழும்பு 06 ’
தொலைபேசி: 94 11 255 8570/71| paffrel@sltnet.lk